In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.157/2021 | Prosecution witness P.W.5
Name: Mani | Calling:
Father Name: | Religion:
Village: | Caste:
Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 19-11-2024.

**(Accused are present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது கொத்தப்புளிபட்டியில் வசிக்கிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக இருக்கிறேன். கடந்த 2019ம் வருடம் ஜனவரி மாதம் ஒரு நாள் மாலை சுமார் 7.30 மணிக்கு நான் எனது ஆட்டோவை அதிகாரிபட்டியில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் நிறுத்தியிருந்தேன். ஒரு நபருக்கு காயம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லி எனது ஆட்டோவை சிலுவத்தூர் அரசு மருத்துவமனைக்கு போகவேண்டும் எனக் கேட்டார்கள். நான் ஒப்புக்கொண்டு காயம்பட்ட அந்த நபரையும் அவருடன் வந்த மற்றொரு நபரையும் என்னுடைய ஆட்டோவில் ஏற்றி சிலுவத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய்விட்டேன். அன்றைய தினம் ஆட்டோவில் வந்தவர்களை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என சாட்சியிடம் கேட்கப்பட்டு ஆஜரில் இருந்த அசா2 ஐ நீதிமன்றத்தில் நிறுத்தி அசா5 இடம் கேட்டபோது அசா2 அன்றைய தினம் தனது ஆட்டோ சவாரிக்கு வந்தவர்தான் என சாட்சியம் அளிக்கிறார். நான் சிலுவத்தூர் அரசு மருத்துவமனையில் இறக்கிவிட்டுவிட்டு நான் சென்றுவிட்டேன். நான் இறக்கிவிட்டுவிட்டு வேறு எங்கும் வரவில்லை என சொல்லிவிட்டு வந்து விட்டேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

காயம்பட்ட நபர் சித்த வைத்தியசாலை அருகே உள்ள சிமிண்ட் திண்டில் படுத்திருந்தார். இரண்டு பேர், காயம்பட்டவர் அருகே

நின்றிருந்தார்கள். சிலுவத்தூருக்கு மேற்படி மூவரும் எனது ஆட்டோவில் வந்தார்கள் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.11.19 17:56:30 +0530

Principal District Judge,
Dindigul.